


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஏப்ரல் 08, 2021 | புரட்சி 20 | முழக்கம் 13 | விலை: ரூ.3.00

## ஆபத்தை உணர்கிறது தி.மு.க. – மு.க. ஸ்டாலின் பேட்டி

# ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிராக பண்பாட்டு தளத்திலும் போராட வேண்டும்

*ஆர்.எஸ்.எஸ். கருத்தியல்களை எதிர்கொள்ள பண்பாட்டு தளத்திலும் வேலை செய்ய வேண்டும் என்பதை தி.மு.க. உணர்ந்திருக் கிறது என்று தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் 'தமிழ் இந்து' நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். பேட்டியிலிருந்து சில பகுதிகள்.*

*பொதுவாக, திமுக – அதிமுக இரண்டுமே தேர்தல்களை நடைமுறைரீதியாக அணுகுவதும், தேர்தல்களில் நிர்வாகரீதியிலான விஷயங்களைப் பேசுவதுமே வழக்கம். மாறாக, இந்தத் தேர்தலைச் சித்தாந்தப் போராக நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். என்ன காரணம்?*

இது திமுகவுக்கும் அதிமுகவுக்கும் இடையிலான தேர்தல் இல்லை; தமிழ் மக்களுக்கும் பாசிச சக்திகளுக்கும் இடையில நடக்குற யுத்தங்கிறதாலதான் அப்படிக் குறிப்பிடுறேன். இந்திய ஒன்றியத்துல ஏற்கெனவே மாநிலங்களுக்கு இருக்கிற அதிகாரங்கள் குறைவு. அண்ணா காலத்துலேர்ந்து மாநிலங்களை மையப்படுத்தினதா இந்தியாவை மாற்றியமைக்கணும்னு நாம பேசிக்கிட்டிருக்கோம். கலைஞர் நிறைவேற்றின மாநில சுயாட்சி தீர்மானத்தைத் தொடர்ந்து வலியுறுத்திக்கிட்டு இருக்கோம். மாநிலங்களுக்குன்னு மிச்சம் இருக்குற கொஞ்சநஞ்ச உரிமைகளையும் வேட்டையாடிட்டுருக்குற அரசா மோடியோட பாஜக அரசு இருக்கு; அதுகிட்ட தன்னோட சொந்த சுயநலன்களுக்காகத் தமிழ் நாட்டோட எல்லாத் தனித்துவங்களையும் உரிமைகளையும் பலி கொடுக்குற அரசா பழனிசாமியோட அதிமுக அரசு இருக்கு. நாம என்ன மொழி பேசணும், நாம என்ன சாப்பிடணும்கிறதுல தொடங்கி நம்ம குழந்தைங்களை என்ன படிக்க வைக்கணும், என்ன வேலைக்கு அவங்களை அனுப்பனும்கிறது வரைக்கும் டெல்லி தீர்மானிக்கும்னா அப்போ நாம எல்லோரும் அடிமைகளா? மாநிலங்களோட நிதி உரிமையை 'ஜிஎஸ்டி' மூலமாப் பறிச்சாங்க. கல்வி உரிமையைப் பறிக்குறதுக்குத் தேசிய அளவிலான பொது நுழைவுத் தேர்வு முறையையும் புதிய கல்விக் கொள்கையையும் கொண்டுவந்தாங்க. அடுத்து, வேலை வாய்ப்புகளையும் குறி வைச்சிட்டாங்க. தன்னுடைய ஆதிக்கப் பலத்தால் ஒட்டுமொத்தமா மாநிலங்களைக் கீழே தள்ளக்கூடிய அக்கிரமம் இது. மாநிலங்களுக்கான வலுவான குரல் கொடுப்பதுதான் தமிழ்நாடு. ஆனா, அதிமுகவை பாஜக கொத்தடிமை ஆக்கிட்டதாலேயே இன்னைக்குத் தமிழ்நாடு தன்னுடைய குரலை இழந்து உரிமைகளைப் பறி கொடுத்து நிக்குது. இது தமிழ் நாட்டுக்கு பாஜகவும் அதிமுகவும் இழைச்சுருக்குற மாபெரும் அவமானம். இந்த அவமானம் துடைக்கப்படணும். அதனாலதான், இது தமிழ்நாட்டோட சுயமரியாதையை மீட்டெடுக்கும் போர்னு குறிப்பிடுகிறேன்.

*தொடர்ந்து, 'ஆளுமைத் திறன் அற்றவர் ஸ்டாலின்' என்று முன்னெடுக்கப்படும் பிரச்சாரம் இந்தத் தேர்தலில் மேலும் பெரிதாக ஒலிக்கிறது. இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

திராவிட இயக்கத் தலைவர்களைச் சித்தாந்த ரீதியா எதிர்க்கத் தெரியாத சில்லறைகள் எப்போதும் இது போன்ற கொச்சைப்படுத்துதல்கள்ல இறங்குறது வழக்கம். இந்த மாதிரி இழிவுபடுத்தல்களால என்னைப் பலவீனப்படுத்த முடியாது; ஏன்னா, தொடக்கக் காலத்துலேர்ந்து இந்த மாதிரி வசைகளை மிதிச்சுக் கடந்துதான் இந்த இடத்துக்கு வந்திருக்கேன். ஆனா, இப்படிப் பேசுறவங்களை நோக்கி ஒரு கேள்வி கேட்கலாம்னு நெனைக்கிறேன், 'ஆளுமைத் திறன் ஸ்டாலினுக்கு இல்லைன்னு சொல்றீங்க. அப்புறம் எதுக்காகப்பா ஆளுமைத் திறனற்ற ஒரு ஸ்டாலினை எதிர்க்க இத்தனை பேர் ஒண்ணு கூடி நிக்குறீங்க?'

*கூட்டங்களில் பேசும்போது சொற்கள் அல்லது எண்ணிக்கையைத் தவற விடுவது உங்களுக்கு அதிகம் நடக்கிறது. இதற்கு என்ன காரணம்? இதை உங்கள் தலைமைப் பண்போடு இணைத்துப் பேசுபவர்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

தவறுதல் மனுஷ இயல்பு. குறிப்பா, மேடைகள்ல இப்படியான தவறுதல் ஏற்படுற வாய்ப்பு ரொம்ப



அதிகம். இது பலருக்கும் நடந்திருக்கு. இன்னைக்குக் காட்சி ஊடகங்களோட காலத்துல இது அதிக வெளிச்சத்துல தெரியுது. நான் சொல்றதுல கருத்துப் பிழைகளோ, அரசியல் விமர்சனங்களோ இருந்தால் அதைத் தாராளமா சொல்லுங்க, விவாதிக்கலாம். ஆனா, வார்த்தைகளைத் தவற விடுறதை விமர்சிக்கிறேன்கிற பேருல நான் பேசுற விஷயத்தை இருட்டடிக்கிறது அறிவு நாணயம் கிடையாது. அதோட பேச்சுத்திறன் மட்டுமே தலைமைப் பண்பும் கிடையாது, அது பல்வேறு திறன்களின் தொகுப்பு.

*திரும்பத் திரும்ப, 'இந்து மதத்துக்கு எதிரான கட்சி திமுக' என்று குற்றஞ்சாட்டுவதன் மூலம், கிட்டத்தட்ட 'இந்துக்களுக்கான கட்சி திமுக' என்று சொல்லும் நிலைக்கு உங்களைத் தள்ளிவிட்டதா பாஜக? கையில் வேலோடு நீங்கள் நின்றது அரசியல் உத்தியாக எடுபட்டாலும் சித்தாந்தரீதியாகத் திமுகவுக்கு அது சறுக்கல் என்கிற விமர்சனத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

திருத்தணிக்குக் கிராம சபைக் கூட்டத்துக்குப் போயிருந்தேன். அந்த ஊரோட அடையாளமாக வேல் என் கையில மக்களால கொடுக்கப்பட்டுச்சு. வாங்கிக்கிட்டேன். இதுல சித்தாந்தச் சறுக்கல் எங்கே வருதுன்னு புரியலை. ஒருவேளை நான் அதை வாங்க மறுத்திருந்தா அப்போ என்ன சொல்லியிருப்பாங்க? சரி, கையில வேலை வாங்கினாலும் தவறு, வாங்காட்டினாலும் தவறுன்னா நான் என்னதான் செய்யணும்னு நெனைக்கிறாங்க? கடவுள் மதம் சம்பந்தமா என்னோட நிலைப்பாட்டைப் பல இடங்கள்ல தெளிவுபடுத்தியிருக்கேன். அது ஒவ்வொருத்தருடைய விருப்பம், சுதந்திரம். இந்து மதத்துக்கு மட்டும் இல்லை; எந்த மதத்துக்கும் எதிரானது இல்லை திமுக. அதே சமயம், அரசியல்லேயும் அரசு நிர்வாகத்துலேயும் மதத்தைக் கலக்கிறதை உறுதியா திமுக எதிர்க்கும். திமுக எப்போவெல்லாம் ஆட்சிக்கு வந்ததோ அப்போவெல்லாம் எல்லாத் துறைகளையும்போல அற நிலையத் துறையும் சிறப்பாக நிர்வகிக்கப் பட்டதுங்கிறதுதான் வரலாறு. அது அடுத்து வர்ற ஆட்சிலேயும் தொடரும்.

*தேர்தலில் திமுக வென்றாலும், சட்டமன்ற உறுப்பினர்களை உடைத்துத் தம் பக்கம் அவர்களை இழுத்து, பாஜக ஆட்சி அமைக்கலாம் என்ற பேச்சு சகஜமாக இருக்கிறது. இதை எதிர்கொள்ள என்ன வியூகம் வைத்திருக்கிறீர்கள்?*

எதிரிகளை எதிர்கொள்ள முழு பலத்தோடேயே திமுக இருக்கு. நான் பலம்னு சொல்லும்போது அது ரெண்டு விதமா அர்த்தப்படுத்துறேன். ஒண்ணு, எண்ண பலம்; மத்தொண்ணு, எண்ணிக்கை பலம். பலரையும்போல பாஜகவையும் வெறும் ஒரு அரசியல் கட்சியா திமுக பார்க்கலை. நாம வேற, அவங்க வேற. பாஜக இந்தத் தமிழ் மண்ணுக்கு எதிரி, தமிழர்களின் எதிரி. இந்தப் புரிதல் ஒவ்வொரு திமுககாரருக்கும் இருக்கு. அதை மேலும் வலுப்படுத்துவோம். இதையும் தாண்டி பாஜக விளையாட முயற்சிக்கலாம்னுதான் வெறும் 118 இடங்கள் போதாது; 234 இடங்கள்லேயும் கூட்டணி ஜெயிக்கணும்னு உயிரைக் கொடுத்து வேலை பார்த்துக் கிட்டிருக்கோம். திமுக எதையும் எதிர்கொள்ளும்!

*பிரதமர் மோடியின் பிரச்சாரத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

பாஜக வேட்பாளர்களே மோடி படத்தைத் தவிர்த்துட்டு, ஜெயலலிதா படத்தோடு ஓட்டு கேட்கப்போறாங்கன்னா அதுக்கு மேல அவருடைய பிரச்சாரத்துக்குத் தமிழ்நாட்டுல உள்ள மதிப்பைப் பத்தி நான் சொல்ல என்ன இருக்கு?

*மாறிக்கொண்டிருக்கும் சூழலில், வெறும் நிர்வாகத்தை மட்டுமே முன்னிறுத்தி அரசியலில் நீடித்து நிற்க முடியாது. பண்பாட்டுத் தளத்தில் ஆர்எஸ்எஸ் செயலாற்றுவதன் மூலம் உண்டாக்கும் சிந்தனை மாற்றங்களுக்கான பலன்களையே மேலே அரசியல் தளத்தில் பாஜக அறுவடை செய்கிறது. ஆக, அதற்கு எதிர்ச் சிந்தனைகளைப் பேசுவதற்குப் பண்பாட்டுத் தளத்தில் திமுகவும் செயலாற்ற வேண்டும்; திமுகவுக்கும் இதற்கென ஓர் அமைப்பு வேண்டும் என்ற குரல் இருக்கிறது. இப்படி நீண்ட கால நோக்கில் பாஜகவை எதிர்கொள்ள என்ன செய்யப் போகிறீர்கள்?*

சாதிய, மதவிய சக்திகளின் கொட்டத்தை அடக்க அரசியல்ரீதியா தேர்தல் களத்தில் மட்டுமல்லாமல், தத்துவார்த்தரீதியா பண்பாட்டுத் தளத்திலும் வேலைசெய்ய வேண்டிய கட்டாயத்தை முழுமையா உணர்ந்திருக்கோம். திமுக தேர்தல் அறிக்கையில் 'சென்னையில் திராவிடர் இயக்க தீரர்கள் கோட்டம் அமைக்கப்படும்'னு சொல்லிருக்கோம் இல்லையா, தமிழர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான வரலாற்றைச் சொல்றதா அதை அமைப்போம். கழகத்தோட பாசறைகளுக்கு மீண்டும் புத்துயிர்ப்பு கொடுப்போம். பாசறைக் கூட்டங்களைக் கிராமங்கள்ல தொடங்கி சமூக வலைதளங்கள் வரை கொண்டுபோவோம். இது பெரியார், அண்ணா, கலைஞர் மண் திராவிட மண் எல்லாப் பிளவு சக்திகளையும் தமிழை வெச்சு திருப்பியடிப்போம்!


*பாலின, சாதி, மதச் சமத்துவத்தை முழுமையாக ஏற்றவர்களாக எப்படிக் கட்சியைத் தயார் செய்யப் போகிறீர்கள்?*

சமூகநீதி - சுயமரியாதை - சமத்துவம் - சகோதரத்துவம் இதெல்லாம்தான் திராவிட இயக்கத்தோட அடிப்படைக் கொள்கைகள். இதை ஆழமாக் கட்சியினர் மனசுல விதைக்கணும்னு நெனைக்கிறேன். தமிழுணர்வு இதற்கான கருவியா அமையணும்.

*ஒவ்வொரு தலைவருக்கும் தான் சார்ந்திருக்கும் சமூகம் தொடர்பில் ஒரு கனவு இருக்கும். உங்கள் கனவில் உள்ள தமிழ்நாடு எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்?*

அனைத்து அதிகாரங்களையும் கொண்டதா நம்ம தமிழ்நாட்டை மாத்தணும். எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்கிறதா தமிழ்நாடு இருக்கணும். இதுதான் என்னோட தமிழ்நாடு!

## 'பெரியாரியப் போராளி' தோழர் ஆனைமுத்து விடை பெற்றார்



*பெரியாரியப் போராளி-மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து, 96ஆம் வயதில், ஏப்.6, 2021 காலை புதுவையில் முடிவெய்தினார். தோழரின் மறைவு பெரியாரியலுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.*

*திராவிடர் விடுதலைக் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது.*

*(விரிவான செய்திகள் அடுத்த இதழில்)*

**தலையங்கம்**

## மக்களைத் திரட்டிய பரப்புரைக் களம்

‘சனாதன தர்மத்தைத்’ திணிக்கும் அணிக்கும் அதை முறியடிக்கும் அணிக்குமான போராட்டக் களமாக உருவெடுத்திருந்தது தமிழகத் தேர்தல் பரப்புரைக் களம். இது பெரியாரியலுக்குக் கிடைத்த வெற்றி.

தி.மு.க. அணியில் இடம் பெற்றிருந்த அனைத்து அரசியல் கட்சிகளுமே தமிழ்நாட்டின் உரிமைகளுக்கும் சமூக நீதிக்கு வலிமை சேர்த்தும் மதவெறி அரசியலுக்கு எதிராகவும் ஒரே குரலில் ஒலித்ததை தமிழகம் பார்த்தது. அ.இ.அ.தி.மு.க. – பா.ஜ.க. அணியோ தங்களது ‘சனாதன தர்ம’ ஆதரவுப் போக்கை வெளிப்படையாக மக்களிடம் நேரடியாகப் பேச முடியாமல் திணறிப் போய் தனிமனித விமர்சனங்களைக் கையில் எடுத்தது. இந்தியாவின் ‘இந்துத்துவ’ அவதாரமாக பார்ப்பனிய சக்திகளால் உயர்த்திப் பிடிக்கப்பட்ட பிரதமர் மோடியின் நிலையோ பரிதாபம்! தமிழ்நாட்டில் அவர்களின் கட்சியாலும் கூட்டணி கட்சிகளாலும் தேர்தல் பரப்புரை விளம்பரங்களில் மோடி ஓரம் கட்டப்பட்டார். அவரது ‘சித்தாந்த முகம்’ சீந்துவாரற்ற எதிர்மறையான நிலையையே தமிழக மக்களின் உள்ளங்களில் ஆழப்பதித்து வைத்திருக்கிறது.

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளையும் ஆய்வுக்குட்படுத்திய ‘அரசியலுக்கான இளைஞர்கள்’ அமைப்பு, சமூகநீதிக் கண்ணோட்டத்தில் தி.மு.க. தேர்தல் அறிக்கையையே முதலிடத்தில் நிற்கிறது என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளது. ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (ஏப்.5, 2021) புதுடில்லி அய்அ.அய்.டி.யில் பணியாற்றும் ஆய்வாளர் ரித்திக்கா கேரா என்பவர் அனைத்து தேர்தல் அறிக்கைகளையும் ஆய்வு செய்து விரிவான கட்டுரை எழுதியுள்ளார். அதில் 17,000 வார்த்தைகளைக் கொண்ட தி.மு.க. தேர்தல் அறிக்கை மிகவும் விரிவானது. மக்கள் நலத் திட்டங்கள் குறித்து 55 முறையும், கல்வி–பள்ளிகள் குறித்து 61 முறையும், உணவு சுகாதாரம் குறித்து 17 முறையும் பேசுகிறது. ஏனைய தேர்தல் அறிக்கையில் இந்த முக்கிய பிரச்சினைகளுக்கு உரிய முக்கியத்துவம் தரப்படவில்லை. குறிப்பாக பா.ஜ.க. அறிக்கை இப்பிரச்சினைக் குறித்து 23 முறை மட்டுமே பேசுகிறது. ஆதி திராவிடர் நலத் துறையை பட்டியலின மக்களின் நலத்துறையாக பெயர் மாற்றுவோம் என்பதோடு பா.ஜ.க. நிறுத்திக் கொண்டது. மாறாக தி.மு.க. தேர்தல் அறிக்கை – அரசு வேலைகளில் இடஒதுக்கீடு, கல்வி உதவித் தொகை, தலித் பெண்களுக்கான சிறப்புத் திட்டங்கள், தங்கும் விடுதிகள் பற்றி விரிவாகப் பேசுகிறது. ‘பஞ்சமி’ நிலங்களை மீட்டு ‘தலித்’ மக்களிடம் ஒப்படைப்போம் என்று கூறுகிறது பா.ஜ.க. தேர்தல் அறிக்கை. ஆனால், தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின் துணைத் தலைவராக இருந்த போது (இப்போது தமிழக பா.ஜ.க. தலைவர்) இதே கோரிக்கையை வலியுறுத்தி முருகனிடம் மனு அளித்தபோது அதை ஏற்காது நிராகரித்தார் என்ற தகவலையும் ஆய்வாளர் சுட்டிக் காட்டுகிறார். தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள விலை இல்லாத திட்டங்களைப் பற்றி மட்டுமே தமிழ்நாட்டு ஊடகங்கள் ஊதிப் பெருக்குகின்றனவே தவிர, அதில் இடம் பெற்றுள்ள ஆக்கபூர்வமான திட்டங்களை விவாதத்துக்கு உட்படுத்துவது இல்லை என்று குறிப்பிடுகிறார் அந்த ஆய்வாளர்.

நீட் திணிப்பு; மாநிலங்களின் அடையாளங்களைப் பறித்தல்; இந்தி–சமஸ்கிருதத் திணிப்புகள் வடநாட்டாருக்கு ‘தாரை’ வார்க்கப்படும் வேலை வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வைப் பல இலட்சம் மக்களிடம் தி.மு.க. அணி – குறிப்பாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கொண்டு போய் சேர்த்திருக்கிறார். வாக்கு சேகரிப்புக்கான பேச்சு என்றாலும்கூட அதன் தாக்கம் அதையும் கடந்து நிற்கிறது. சமூக விழிப்புணர்வை மக்களிடையே இவை ஆழமாக விதைத்திருக்கிறது என்பது இதில் அடங்கியுள்ள முக்கிய அம்சம்.

10 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரத்தில் இல்லாத தி.மு.க. மீதான தனி நபர் சார்ந்த குற்றச்சாட்டுகளைத்தான் பிரதமர் போன்ற நிலையில் உள்ளவர்களே பேசினார்கள். தங்களின் மதவாத சிறுபான்மை வெறுப்பையோ பார்ப்பனிய அரசியலையோ இடஒதுக்கீட்டு எதிர்ப்பு கொள்கைகளையோ பெரியார் மண்ணில் முன் வைக்க முடியாமல் பதுங்கி நின்றார்கள்.

தேர்தல் பரப்புரையின் இறுதி கூட்டத்தில் தனது தொகுதியான கொளத்தூரில் மு.க. ஸ்டாலின் பேசியபோது, ஒரு கேள்வியை முன் வைத்தார். பெரியார் சிலைகளுக்கு இங்கே காவி அடித்தீர்கள்; ஆனால் பா.ஜ.க. வேட்பாளர்களே இப்போது தேர்தல் பரப்புரையில் இடம் பெற்ற ‘மோடி’யின் பெயரை மறைக்க சுண்ணாம்பு அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இது தான் தமிழ்நாடு என்று நச்சென்று கூறினார்.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் சனாதன தர்மத்துக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரமாக முன்னெடுத்து தமிழ்நாட்டின் சுயமரியாதைக் களத்தைச் சூடேற்ற வேண்டிய மிகப் பெரும் கடமை காத்திருக்கிறது.

‘திராவிடம்’ என்ற கோட்பாட்டின் உள்ளடக்கம் ‘சுயமரியாதை; சமூகநீதி’ என்ற கருத்தாக்கத்தைக் கடந்த பல ஆண்டுகளாகவே திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து பேசியது, எழுதியது, பரப்புரை செய்தது.

அந்த முழக்கம் இந்த தேர்தல் களத்தில் தி.மு.க.வின் கோட்பாடாக ஏற்கப்பட்டு விளம்பரங்களாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. இது பெரியாருக்குக் கிடைத்த மகத்தான வெற்றி.

# ராமன் வனவாசம் போன பாதையைக் கண்டுபிடித்து விட்டார்களாம்!

இதிகாசக் கதையில் ராமன் வனவாசம் சென்றதாக கூறப்படும் 210 கி.மீ. பாதையை உத்தரப்பிரதேச பாஜக அரசு அடையாளம் கண்டுள்ளது.

அயோத்தி முதல் சித்திரகூடம் வரையிலான அந்த 210 கி.மீ. காட்டுப் பாதையில், மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் மூலம் ரூ. 137 கோடி செலவில் புதிய தார்ச் சாலை அமைக்கவும் முடிவு செய்துள்ளது. இராமாயண இதிகாசக் கதையின்படி, அயோத்தி அரசனாக வரவேண்டிய ராமன், தனது தந்தையின் வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக, தனது மனைவி சீதை, சகோதரர் லட்சுமணனுடன் 14 ஆண்டு வனவாசம் செல்வான்.

இந்த 14 ஆண்டுகளில்- தற்போதைய உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட மாநில காடுகளில்தான் அவன் வாசம் செய்ததாக நம்பப்படுகிறது. மத்திய பாஜக அரசும், இந்த பகுதிகளை ‘ராமன் வனவாசப் பாதை’ (ராம் வன்காமன் மார்க்) என்ற பெயரில், ஆன்மீக சுற்றுலா பாதையாக உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

இதனொரு பகுதியாகவே, ராமன் அயோத்தியில் இருந்து புறப்பட்டு முதலில் சென்றடைந்த பகுதியாக கருதப்படும் சித்திரக் கூடத்தை இணைக்கும் ராமன் வனவாச வழித் தடங்களை உ.பி. பாஜக அரசு அடையாளம் கண்டுள்ளது.

அயோத்தியில் தொடங்கி, பைசாபாத், சுல்தான்பூர், பிரதாப்கர், ஜேத்வாரா, சிருங்கவேர்பூர் உள்ளிட்ட இடங்கள் வழியாக மத்தியப் பிரதேசத்தின் சித்திரக் கூடத்தை சென்றடையும் இந்த 210 கி.மீ. பாதையில், புதிய தார்ச்சாலை அமைக்கவும் முடிவு செய்துள்ளது. இதற்காக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் சார்பில் ரூ.137 கோடியே 45 லட்சம் செலவிடப்படவும் உள்ளது.

## மோடியின் பொய்யுரை அம்பலம்

# ரபேல் விமான ஊழல் : பிரான்ஸ் ஊழல் தடுப்புப் பிரிவு அம்பலமாக்குகிறது

ரபேல் போர் விமான ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, இந்தியாவைச் சேர்ந்த இடைத்தரகருக்கு பிரான்ஸ் நாட்டின் ‘டஸ் ஸால்ட்’ (Dassault Aviation) நிறுவனம் ரூ. 8 கோடியே 62 லட்சம் பணம்வழங்கியது அம்பலமாகி இருக்கிறது. டஸ்ஸால்ட் நிறுவன கணக்குகளை ஆய்வு செய்த பிரான்ஸ் ஊழல்தடுப்புப் பிரிவினர் (Agence Francaise Anticorruption - AFA)இந்த உண்மையை வெளிச்சத்திற் குக் கொண்டு வந்துள்ளனர்.2012-இல் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசானது, ரூ.41 ஆயிரத்து 212 கோடிக்கு 126 ரபேல் விமானங்களை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்திருந்தது. ஆனால், தான் ஆட்சிக்கு வந்ததும், 2016-இல் அந்த ஒப்பந்தத்தையே ரத்துசெய்த பிரதமர் மோடி, புதிதாக ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். வெறும் 36 விமானங்களுக்கு ரூ. 58 ஆயிரம் கோடி தருவதற்கு ஒப்புக்கொண்டார்.


மன்மோகன் சிங் அரசு, 126 ரபேல்விமானங்களுக்கு பேசிய தொகையே வெறும் 41 ஆயிரம் கோடிரூபாய்தான். அதாவது, காங்கிரஸ் அரசு ஒரு விமானத்தை ரூ. 350 கோடிக்குவாங்க ஒப்பந்தம் செய்த நிலையில், நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசோ, ஒரு விமானத்திற்கு ரூ.1,670 கோடி கொடுக்கத் தயாரானது. அதேபோல ‘டஸ்ஸால்ட்’ நிறுவனத்தின் கூட்டுநிறுவனமாக இருந்த - பொதுத்துறையைச் சேர்ந்தஇந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தை வெளியேற்றி விட்டு, அனில் அம்பானியின் ‘ரிலையன்ஸ் டிபென்ஸ்’ நிறுவனத்தைச் சேர்த்துக் கொண்டது. இவை அனைத்திலும் ஊழல் நடந்திருப்பதாக அப்போதே குற்றச்சாட்டு எழுந்தது.

எனினும் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த ஊழல்களை வெகுசாமர்த்தியமாக மோடி அரசு அமுக்கி விட்டது. நீதிமன்றங்களிலும் மோடி அரசுக்கு சாதகமாகவே தீர்ப்புக்கள் வந்தன. டஸ்ஸால்ட் நிறுவனமும் ஒப்புக்கொண்ட 36 விமானங்களில், இதுவரை 14 ரபேல் ரக போர்விமானங் களை இந்தியாவுக்கு தயாரித்து வழங்கி விட்டது.இந்நிலையில்தான், ரபேல் போர்விமான ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, இந்தியாவின் ‘டெப்ஸிஸ்சொல்யூஷன்ஸ்’ என்ற நிறுவனத் திற்கு, பிரான்ஸ் நாட்டின் டஸ்ஸால்ட் நிறுவனம் 1 மில்லியன் யூரோக்களை (ரூ. 8 கோடியே 62 லட்சம்) ‘பரிசாக’ வழங்கியதை, அந்நாட்டின் ஊழல் தடுப்புப் பிரிவான‘ஏஜென்ஸ் பிராங்காயிஸ் ஆன்டிகரப்ஷன் (AFA) கண்டுபிடித்துள்ளதாக ‘மீடியாபார்ட்’ நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.இந்தியாவின் தலைமை கணக் குத் தணிக்கை அலுவலகத்திற்கு (CAG) இணையான இந்த பிரான்ஸ்நாட்டு நிறுவனம், 2017-ஆம் ஆண்டில் கார்ப்பரேட் நிறுவனங்களின் ஊழல்முறைகேடுகளை கண்டுபிடிப்பதற்காக அமைக்கப்பட்டதாகும். அவ்வாறு தணிக்கை செய்தபோதுதான், ‘வாடிக்கையாளர்களுக்கு பரிசு’ என்ற தலைப்பில் 5 லட்சத்து 8 ஆயிரத்து 925 யூரோக்கள் மதிப்பிலான லஞ்சத்தைக் கண்டுபிடித்துள் ளது. ‘டஸ்ஸால்ட்’ நிறுவனமும் அதை ஒப்புக் கொண்டுள்ளது.

இந்தியாவில் ரபேல் ஒப்பந்தத் திற்கான - டஸ்ஸால்டின் துணை ஒப்பந்தக்காரர்களில் ஒன்றாகவும் ‘டெப்ஸிஸ் சொல்யூஷன்ஸ்’ உள் ளது. இந்த நிறுவனம் மூன்று தலைமுறைகளாக விமானம் மற்றும்பாதுகாப்புத்துறை சார்ந்ததொழில்களில் இடைத்தரகர் களாக விளங்கும் குப்தா குடும்பத்தினருக்குச் சொந்தமானது.அண்மையில், இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றொருபாதுகாப்புத்துறை ஒப்பந்தத்தில், மோசடி செய்ததாக இந்திய அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட் டார் என்றும், அவர்தான் ரபேல் விவகாரத்தில் இடைத்தரகராக செயல் பட்டு 1 மில்லியன் யூரோக்களைப் பெற்றுள்ளார் என்று பிரான்ஸ் நாட்டின் ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மையில், அகஸ்டா வெஸ்ட்லேண்ட் விவிஐபி இடைநிலை ஒப்பந்தத்தில் கைது செய்யப்பட்ட சுஷேன் மோகன் குப்தாவையே மறைமுகமாக ஏஎப்ஏ அமைப்புகுறிப்பிட்டுள்ளது. குப்தா, இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து ரகசிய ஆவணங்களைப் பெற்று, டஸ்ஸால்ட் நிறுவனத்திற்கு வழங்கியதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

### கலாச்சாரமா? மொழியா?



ஆரியர்கள் முதலில் தம் கலாச்சாரத்தை புகுத்தித்தான் நம்மை வெற்றி கொண்டார்கள் ; நம் கலாச்சாரத்தைத் தடுத்துத்தான் நம் மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். நாமும் நம் கலாச்சாரத்தை மறந்து ஆரிய கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்டதால்தான் அவர்களுக்கு கீழான மக்களாக – அவர்களுடைய வைப்பாட்டி மக்களாக, சூத்திரர்களாக, பஞ்சமர்களாக ஆக்கப்பட்டோம்.

எனவே அக்கலாச்சாரத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால், மொழிப் போராட்டம் ஒன்றினால் மட்டுமே வெற்றி பெற்றுவிட முடியாது. கலாச்சாரத்தின் பேரால், இனத்தின் பேரால் போராட்டம் நடத்த வேண்டும்.

**(விடுதலை 27.01.1950)**

## ‘பெரியாரும்–மார்க்சியமும்’ தலைப்பில் கொளத்தூர் மணி உரை (8)

# ‘பிறவி’ – ‘கல்’ முதலாளிகள் பற்றி ஏன் பேசுவதில்லை என கேட்டார் பெரியார்

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

புதியதான ஒரு முதலாளித்துவத்தை பெரியார் சொன்னார். இங்கு மூலதனம் போடும் முதலாளித் துவத்தைத் தான் பேசுகிறீர்களே தவிர, பிறவி முதலாளிகள் என்று ஒரு வர்க்கம் இருக்கிறதே, அதைப் பற்றி நீங்கள் பேசுவதே இல்லை என்ற ஒரு விமர்சனம் கம்யூனிஸ்ட்கள் மீது வைத்தார். அவனாவது கொஞ்சம் காசாவது போட்டிருக்கிறான், இந்த பிறவி முதலாளிகளுக்கு ஒன்றுமே கிடையாது. பிறப்பைத் தவிர, இவனுக்கு எந்த மூலதனமும் கிடையாது. பிறப்பை மட்டும் வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறான். இந்த நாட்டில், உழைப்பில் இருந்து கிடைக்கும் உபரிகளை, யார் அனுபவிக்கிறார் களென்றுதானே நாம் முடிவு பண்ணவேண்டும். அது முதலாளிகளுக்கு போவதா, தொழிலாளிகள் பங்கிட்டுக் கொள்வதா, பாட்டாளி வர்க்கத்துக்கு சேருவதா, என்பதைப் பற்றி யோசிப்பது தானே முக்கியம். ஆனால், உபரிகளை எந்த தடையும் இல்லாமல், எந்த கொள்முதலும் இல்லாமல் அனுபவிக்கிற பிறவி முதலாளிகளைப் பற்றி பேச மாட்டேன் என்கிறீர்கள். பிறவி முதலாளிகள் நடமாடுகிறார்கள். நடமாடாத கல் முதலாளிகள் வேறு இருக்கிறார்கள் இந்த நாட்டில். இந்த கல் முதலாளிகளுக்கு ஏராளமாக காசு போய் கொண் டிருக்கிறது. அதையும் யாரும் கருதிப் பார்ப்பதில்லை. இந்த இரண்டு முதலாளிகளை விட்டு விட்டு, ஒரே முதலாளிகளைப் பற்றியே நீங்கள் கம்யூனிஸ்ட்கள் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். அவன் தனியாக நின்றுக் கொண்டிருப்பான். இந்த இரண்டு முதலாளிகள் அவனை காப்பாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். இதை நீங்கள் ஏன் கருத்தில் கொள்வ தில்லை என்பதற்கு ஒரு வேறுபாடு சொல்கிறார் பெரியார்.

உண்மையான முதலாளியாக இருந்தால், அவன் லாபத்தில் திரண்ட மூலதனத்தை, மீண்டும் மறு முதலீடு செய்வான். தொழிலில் தான் முதலீடு செய்வான். ஆனால், நம்மூரில் என்ன பண்ணுகிறான், கோவில் கட்டுவான். நம்மூரில் உள்ள முகேஷ் அம்பானி கட்டியிருப்பதைப் போல உலகத்தில் எந்தப் பணக்காரனும் இவ்வளவு செலவு செய்து வீடு கட்டியிருக்க மாட்டான். அவன் வீடாவது கட்டி யிருக்கிறான். இங்கேயுள்ள எல்லா முதலாளிகளும் கோவிலைக் கட்டிவிடுவான். எல்லா நிறுவனங் களிலும் கோவில் கட்டப்படும். அதற்கு தனியாக டிக்கட் போட்டு வசூல் செய்வது வேறு. ஆனால், அதை எல்லா முதலாளிகளும் கட்டி விடுகிறார்கள். நீ தொழிலில் மறுமுதலீடு செய்யாமல், கோவிலில் ஏன் முதலீடு செய்கிறான்? அது அவனுக்கு தெரியும், இது அதைவிட பாதுகாப்பு என்று. அதைத் தான் பெரியார் குறிப்பிடுகிறார், இதைச் சொல்லியே குறிப்பிடுகிறார் அவர். மற்ற நாட்டு முதலாளிகளெல்லாம், வருகிற லாபத்தை தொழிலில் முதலீடு செய்கிறான். இவன் மட்டும் ஏன் கோவிலில் போடுகிறான், என்று கேள்வி கேட்கிறார். இது அவனைப் பாதுகாக்கிற கருவி என்று அவன் கருதுகிறான். தன்னை அது போராட் டத்திலிருந்து புரட்சியிலிருந்து காப்பாற்றும் என்று நம்புகிறான். அதன் மீது பார்வை செலுத்தாமல் இருக்கிறீர்களே என்பதால் ஏற்பட்ட சில குளறுபடிகளை நான் உங்களிடம் சொல்ல வேண்டும். எப்படிப்பட்ட வகையில், ஆரம்பத்தில் மூன்றாம் அகிலத்துக்குக் கொடுத்த அறிக்கையில், சாதியைப் பற்றி, சாதி பிரச்சனையைப் பற்றி, சொல்லியாயிற்று. மத மூட நம்பிக்கையைப் பற்றி எல்லாம் அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள், ஆனால் இங்கிருக்கிற கம்யூனிஸ்ட்கள். கட்சி கட்டப்படுகிறது. கட்சியின் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எப்படி இருந்தார்கள்?

சசி ஜோஷி என்பவர், Struggle for Hegemony in India என்கிற ஒரு புத்தகத்தில் தான் அவர் சொல்கிறார். இந்தியாவில் கம்யூ னிஸ்ட் கட்சி துவக்க காலத்தவர் ஒருவர், ஜோக்லக்கர், அவரை 1927ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் நாள் சென்னையில் நடந்த அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு கூட்டத்தில்தான் பிராமண சங்கத்திலிருந்து நீங்கள் விலக வேண்டும் என்று கட்சி சொல்லுகிறது.



அதற்கப்புறம் தான் பிராமண சபா உறுப் பினர் பதவியிலிருந்து விலகினார். அதற்கப் புறம் 1928-ல் பம்பாயில் ஒரு வேலை நிறுத்தம் நடக்கிறது. அப் பொழுது கம்யூனிஸ்ட் களின் இன்னொரு தலைவர் மிராஜ்கர், அவர் அடிக்கடி போராட் டங்களில் கலந்து கொண்டவர். ஜோக்லக்கர் கூட நிறைய போராட்டங்கள் நடத்தியவர்தான். அவர் சொல்கிறார் பம்பாய் நகராட்சியில் நடந்த ஒரு போராட்டத்தில், நீங்கள் கவலைப்படாதீர்கள், சோறு குழம்பு எல்லாம் பார்ப்பன சமையல்காரரை வைத்து தான் சமையல் செய்யப்படும்; எனவே நீங்கள் எல்லாம் சாப்பிடலாம் என்று முதலில் அறிவிக்கிறார். அதற்கு இந்த ஜோக்லக்கர் உடனே எதிர்ப்பு தெரிவிக்கிறார். இது 1928இல் நடக்கிறது. அவர் சொல்கிறார். இல்லை, இல்லை, நான் பார்ப்பனர் களிலேயே உயர்ந்த ஜாதிப் பிரிவைச் சேர்ந்தவன்; நான் பார்ப்பான் சமைத்தால் கூட சாப்பிடமாட்டேன், என் பிரிவு பார்ப்பனர் சமைத்ததை மட்டும்தான் சாப்பிடுவேன். எனவே எனக்கு அரிசியைக் கொடுத்து விடுங்கள் நான் சமைத்துக் கொள்ளுகிறேன். இப்படி இந்த நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியில் தலைவராக இருந்தவர், போராட்டங்களை தலைமை தாங்கி நடத்தியிருக்கிறார் என்பதற்காகச் சொல்லுகிறேன். இப்பொழுது இவர்கள் கையில் கட்சி போய் தான்

- **‘பிராமணியம்’ அடையாளத்தை விட மறுத்த, அக்கால கம்யூனிஸ்ட் தலைவர்கள்.**
- **நான் முதலில் ‘பிராமணன்’ பிறகு தான் ‘கம்யூனிஸ்ட்’ என்று பேசினார் கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர்.**
- **‘இந்து’ மதம் இருக்கிறவரை இங்கே கம்யூனிசம் வராது என்றார், சர். சி.பி. ராமசாமி அய்யர்.**

இன்றைக்கு வரைக்கும், இப்பொழுது தான் இதைப்பற்றி பேசுமளவிற்கு ஒரு சூழல் இருக்கிறது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

இன்னொரு கம்யூனிஸ்ட் கட்சி தலைவர். 2006-ல் நடந்த நிகழ்ச்சி ஒன்றைச் சொல்ல வேண்டும். மேற்கு வங்கத்தில் சுபாஷ் சக்ரவர்த்தி என்ற போக்குவரத்துத் துறை அமைச்சர் ஒருவர் இருந்தார். பத்திரிக்கையில் ஒரு செய்தி வருகிறது. 14.9.2006 அன்று பீர்பூம் மாவட்டம், காளி கோவிலில் சென்று காணிக்கை 501 ரூபாய் செலுத்தி மலர் தூவி, மந்திரம் ஓதி வழிபட்டார். இந்த செய்தி வந்தவுடன் ஜோதிபாசு, முன்னாள் முதலமைச்சர், அதைப் பற்றி விமர்சிக்கிறார். என்னய்யா இது, அக்கிரமாக இருக்கிறது, என்ன இப்படி பண்ணுகிறீர்கள், ஒரு கம்யூனிஸ்ட் பண்ணுகிற வேலையா இது என்று சொல்லி யிருக்கிறார் ஒரு பேட்டியில். கம்யூனிஸ்ட் செய்கிற வேலையில்லை என்று சொல்லுகிறார். அவ்வளவு தான். அதற்கு அடுத்த நாள் இவர் பத்திரிக்கை யாளர்களிடம் பதில் கூறுகிறார். நான் முதலில் இந்து மற்றும் ஒரு பிராமணன். அதற்கு அடுத்துதான் கம்யூனிஸ்ட் என்று விளக்கம் தருகிறார். அதற்கு, மேற்கு வங்க மாநில கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பீமன் போஸ். மனிதர் என்கிற முறையில் அனைவருக்கும் பலவீனங்கள் உண்டு என்றும், கோவிலுக்கு செல்வோர்கள் மீது நடவடிக்கை எடுக்க கட்சியின் விதிகள் இல்லை என்று சொல்லிவிடுகிறார். அதற்கு ஜோதிபாசு விமரிசனம் செய்கிறார். அதற்கப் புறம், பழம் பெரும் தலைவர் வினய் கோனர், சுபாஷ் சக்ரவர்த்தி சொன்னது போல, தாராள கொள்கை யுள்ள ஒரு இந்து கூட சொல்ல மாட்டான் என்கிறார்.

ஜோதிபாசு கேட்டார். யாரைப் பார்த்து அவர் தொழுதார். காளி இருக்கிறாளா? இல்லாத ஒன்றுக்கு பூசை செய்வது எப்படி? மனித இனத்தை அமைச்சர் வணங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். நீ போய் கல்லைப் பார்த்து கும்பிடுகிறாய், மனிதனைப் பார்த்து வணங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அது பற்றி கருத்து கூறிய சுபாஷ் சக்ரவர்த்தி, நானும் ஒரு இந்து, பிராமண வகுப்பைச் சேர்ந்தவன், மரபுகளை என்னால் மீற முடியாது. (இது 2006-ல். இதற்கு முன் நான் சொன்னது 1928இல்). மாஸ்கோவிலுள்ள லெனின் நினைவிடத்திற்கு செல்லும் யாராகயிருந்தா லும் முஷ்டியை உயர்த்த வேண்டிய கட்டாயம் இருக்கிறதே ஏன்? அதுபோலவே நானும் கும்பிடு கிறேன் என்று அறிக்கையில் கேட்கிறார். நமது நடவடிக்கைகளை நம்மைச் சுற்றியுள்ள சூழல் தான் தீர்மானிக்கிறது. ஜோதிபாசு என் கடவுள். அவர் கடவுள் இல்லை என்கிறார். ஆனால் அவர் ஜோதிபாசு என் கடவுள். அவர் கருத்தை விமரிசிக்க நான் விரும்பவில்லை என்று கூறி விவாதத்தை முடித்துக் கொள்கிறார்..

### ஹிரேன் முகர்ஜியை வியக்க வைத்த பெரியார் புரட்சி

ஹிரேன் முகர்ஜி அவர்கள் ஒரு முறை ஈவிகே சம்பத்தைப் பார்த்து சொன்னதாக சொல்லுவார்கள். ஹிரேன் முகர்ஜி ஒரு பெரிய பார்லிமெண்டேரியன். அவர் ஈவிகே சம்பத் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது சொன்னாராம், தமிழ் நாட்டுக்கு வந்து ஒரு திருமணத்தைப் பார்த்துவிட்டு போயிருக்கிறார். அதெப்படி உங்களால் பார்ப்பான் இல்லாமல் திருமணம் நடத்த முடிகிறது, என்று அவர் கேட்டாராம். அதற்கு, ரொம்ப நாளாக நடந்துக் கொண்டிருக்கிறது. 1927–லிருந்து நடந்துக் கொண்டிருக்கிறது என்று அவர் சொல்லி யிருக்கிறார். உங்க சித்தப்பா பெரிய ஆள் தானப்பா. பார்ப்பானை விட்டுவிட்டு கல்யாணம் நடத்துகிறாரல்லவா? நமக்கு மிகச் சாதாரணமாக இங்கு தெரிகிறது. ஆனால் அவர்களுக்கு, பெரிய புரட்சியாளர்களுக்கு, கூட நாம் செய்வது பெரிய புரட்சியாகத் தெரிகிறது. இந்த பிரச்சனை எப்பொழுது வந்தது என்றால், சோம்நாத் சட்டர்ஜி–யின் பேரனுடைய பூணூல் கல்யாணத்திற்கு அழைப்பு கொடுக்கிறார் எல்லா எம்.பி.க்களுக்கும். அதை திமுக எம்.பி ஒரு பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் சொல்கிறார். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், கிண்டலுக்காக சொல்லவில்லை, அங்கு கூட அப்படி நடக்கிற சூழலில் நாம் இங்கு சடங்கு களில்லாமல் நிகழ்ச்சிகள் நடத்துகிறோம் என்பதற்காகச் சொல்கிறேன். இது பத்திரிகை செய்தியாக வந்த பிறகு அது ஒரு பிரச்சனையானது. அப்படி தான் அங்கே சூழல் இருக்கிறது.

இங்கு ஏ.எஸ்.கே ஐயங்கார், ஏ.எஸ்.கே ஆகி விட்டார். ஆனால், அங்கு அப்படியெல்லாம் எந்த மாற்றமும் நிகழவில்லை என்பதற்காகச் சொல்லு கிறேன். ஏனென்றால், அதைப் பற்றி நாம் சிந்திக்க தவறிவிட்டது என்பது, அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. பரவாயில்லை, நம்முடைய ஆதிக்கத்திற்கு என்றும் ஆபத்து வராது என்று மகிழ்கிறார்கள்.

சி.பி.இராமசாமி ஐயர் ஒருமுறை சொன்னார், ரொம்ப காலத்துக்கு முன்னால். அவர் வைஸ்ராய் கவுன்சிலில் உறுப்பினராக இருந்தவர். அதற்கு பின்னால் அவர் என்னென்னவோ பதவிகளி ளெல்லாம் இருந்துவிட்டு வந்தவர். கம்யூனிசம் வருவதைத் தடுத்தாகவேண்டும். காந்தி சொன்னார், உப்பு சத்தியாகிரகம் எதற்கு நடக்கிறது என்றால், இதை மட்டும் நான் செய்யாமல் இருந்திருந்தால், கம்யூனிசம் வந்திருக்கும் என்றார். அதற்குத் தான் ஒரு போராட்டம் மக்களெல்லாம் ஜெயிலுக்கு அனுப்பியது கம்யூனிசம் வராமல் இருப்பதற்காக. அதற்கு சி.பி.இராமசாமி ஐயர் உடனே பதில் சொன்னாராம், இந்து மதம் இங்கே இருக்கிறவரை, அரையடி கல் சிலை சாமி இருக்கிறவரைக்கும், இங்கே கம்யூனிசம் வந்துவிடாது.

எந்த அளவிற்கு அவர்களுக்குப் புரிந்து இருக்கிறது என்பதைப் பாருங்கள். பார்ப்பனருக்கு நன்றாக புரிந்திருக்கிறது. நாம் இதை வைத்துக் கொண்டு இருக்கிறவரை, நம்மை எதுவும் ஒன்றும் செய்துவிட முடியாது என்று அவனுக்குத் தெரியும். நாம் புரிந்துக் கொள்ள காலம் தள்ளிப்போனது என்பது தான் இப்பொழுது உள்ள சிக்கலாக நாம் பேசிக் கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## தி.மு.க. அணியை ஆதரித்து, பல்வேறு தொகுதிகளில் கழகத் தோழர்கள் தீவிரப் பரப்புரை

# வேல் முருகனுக்கு ஆதரவாக பண்ருட்டி தொகுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பரப்புரை

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகனை ஆதரித்து 31.03.2021 அன்று மாலை 3 மணி அளவில் பண்ருட்டி பேருந்து நிலையம் அருகில் இருந்து பரப்புரை துவங்கியது. தோழர்கள் துண்டறிக்கை விநியோகித்து பரப்புரையில் ஈடுபட்டனர்.

இப்பரப்புரையில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், சென்னை மாவட்ட பொறுப்பாளர் சுகுமார், கடலூர் மாவட்ட பொறுப்பாளர் மதன் குமார், புதுவை லோகு அய்யப்பன், சங்கர் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

பரப்புரையின் இடையே மறுமலர்ச்சி திமுகவின் மாவட்ட பொறுப்பாளர் ராமலிங்கம் மற்றும் பொறுப்பாளர்கள் கழகத் தலைவரை சந்தித்து நலம் விசாரித்தார். காஞ்சி மக்கள் மன்றத்தின் தலைவர் மகேஷ் மற்றும் மக்கள் மன்ற தோழர்கள் ஆகியோரும் பரப்புரையில் பங்கேற்றனர்.

**மயிலாடுதுறை**யில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அப்பகுதியில் உள்ள சட்ட மன்ற தொகுதிகளில் திமுக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பல்வேறு இடங்களில் தீவிர பரப்புரையில் கழகத் தோழர்கள் ஈடுபட்டனர்.

மயிலாடுதுறை காங்கிரஸ் வேட்பாளர் ராஜ்குமார், கழகத் தோழர் களுக்கு தனி பரப்புரை வாகனம் ஒன்றை வழங்கியிருந்தார். ஒரு வார காலம் பகுதி பகுதியாக கழக வெளியீடான துண்டறிக்கைகளை வழங்கிப் பரப்புரை செய்தனர். தலைமைக் குழு உறுப்பினர் இளைய ராஜா, பரப்புரை கூட்டங்களில் பேசினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மணிசங்கர அய்யர் கழகத் தோழர்களைப் பாராட்டியதோடு, மதச் சார்பின்மையை மக்களிடம் பெரியார் இயக்கத்தினர் பேசும்போது அதற்கு தனி மாரியாதை உண்டு என்று பாராட்டினார்.

**சேலம்** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அப்பகுதியில் உள்ள சட்ட மன்ற தொகுதிகளில் திமுக கூட்டணி கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து பல்வேறு இடங்களில் தீவிர பரப்புரையில்கழகத்தோழர்கள் ஈடுபட்டனர்.

**நாகப்பட்டினம் :** நாகூர் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் திமுக கூட்டணி கட்சி வேட்பாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆளூர் ஷா நவாஸ்க்கு பரப்புரை செய்தனர்

**கும்பகோணம் :** கும்பகோணம் மற்றும் நாச்சியார்கோயில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் திமுக.வின் வேட்பாளர் அன்பழகனை ஆதரித்து பரப்புரை செய்தனர்.

**விழுப்புரம் :** வானூர் சட்டமன்ற தொகுதியின் திமுக கூட்டணிக் கட்சி வேட்பாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளர் வன்னி அரசை ஆதரித்து விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாவட்ட தலைவர் பூ.ஆ.இளையரசன், மாவட்ட செயலாளர் பெரியார்



சாக்ரட்டீஸ், பெரியார் ஜெயரட்சகன் மற்றும் தோழர்களுடன் பரப்புரையில் ஈடுபட்டனர்.

**மதுரை :** மதுரை வடக்கு தொகுதியில் பாஜக வேட்பாளரை எதிர்த்து மதுரை திவிக சார்பில் துண்டறிக்கை அடித்து வீடு வீடாக பரப்புரை செய்யப்பட்டது.. மதுரை தெற்கு தொகுதி மதிமுக வேட்பாளர் பூமிநாதன், திருப்பரங்குன்றம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பொன்னுத்தாய் ஆகியோரை ஆதரித்து தொடர் பரப்புரைகள் நடத்தப்பட்டது.

**அவிநாசி** தொகுதி வேட்பாளர் அதியமானை ஆதரித்து வீடு வீடாகச் சென்று பரப்புரை மேற்கொண்டனர்.

## தேர்தல் அறிக்கை ஏதும் இல்லை: சீமான் ‘புரட்சி’

தமிழ்நாட்டில் ‘தமிழ்த் தேசிய மாற்று அரசியல்’ புரட்சி பேசி வரும் சீமான், தேர்தல் அறிக்கையையே வெளியிடவில்லை. அதற்கு நிதி இல்லாததே காரணம் என்று கூறியுள்ளார்.

தனது கட்சி சார்பில் ‘தமிழ் இந்து’ நாளேட்டில் முழுப் பக்கம் விளம்பரம் தந்திருக்கிறார்.

மாற்று அரசியல் - தனது மேடைப் பேச்சுகள் தான்; அதற்கு ஆவணம் ஏதும் தேவைஇல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டாரா? அல்லது தனது மாற்று அரசியலை எழுத்து வடிவம் பெற்று விட்டால் ‘குடம்’ உடைந்து விடுமே என்று கூச்சப்படுகிறாரா, என்று கேட்கிறார், ஒரு தோழர்! அதை சீமானிடம் தான் கேட்க வேண்டும்!

## “பெரியாரிசத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது; எங்கள் பிணங்களின் மீது தான் அது நடக்கும்”

பா.ஜ.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் இளைஞர் அமைப்பான ‘யுவமோர்சா’ தேசிய தலைவருமான தேஜஸ் வி சூர்யா என்பவர், “பெரியாரிசத்தை முடிவுக்குக் கொண்டு வரவே தமிழ்நாட்டில் பா.ஜ.க. தேர்தலில் போட்டியிடுகிறது” - என்று வெளிப்படையாகப் பேசியுள்ளார்.

இதற்கு காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரான பீட்டர் அல்போன்ஸ், தனது ‘ட்விட்டரில்’ பதிலடி தந்துள்ளார்.

“பெரியார் எங்கள் மண்ணோடு, மனதோடு, உயிரோடு, உணர்வோடு கலந்தவர். எங்கள் பிணங்களின் மீது தான் அது நடக்கும். நாங்கள் இல்லாமல் அது எப்படி ‘இந்தியா’வாகும்?” என்று பதிவிட்டுள்ளார் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்க பொதுச் செயலாளர் ‘ஆதவன் தீட்சண்யா’ கோவில்பட்டியில் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் இதை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ப. சிதம்பரம் - “சனாதன தர்மத்தை பெரியாரும் காமராசரும் அண்ணாவும் கலைஞரும் இங்கே நுழைய விடாமல் தடுத்திருக்கிறார்கள். நானும் ஒரு பெரியாரிஸ்ட்” என்று ஒரு பேட்டியில் கூறியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாட்டில் ‘பெரியாரிசம்’ (பெரியார் கொள்கையை) ஒழிக்கவே பாஜக இங்கு வந்திருக்கிறது என்று பாஜக தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளதை வன்மையாக கண்டிக்கிறேன்

‘சனாதன தர்மம்’ என்ற நச்சுக் கொள்கையை எதிர்த்துப் போராடி வென்றவர் தந்தை பெரியார்; தமிழ் நாகரிகத்தையும் தமிழர் தன்மானத்தையும் மீட்டவர் தந்தை பெரியார்.

காலம் காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமுதாய விடுதலை மற்றும் சமூக நீதியைப் பெற்றுத் தந்தவர்கள் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜ் மற்றும் பேரறிஞர் அண்ணா. தான் ஒரு திராவிடக் கட்சி என்று சொல்லிக் கொள்ளும் அஇஅதிமுக, பாஜக தலைவரின் பேச்சை ஏன் கண்டிக்கவில்லை?

தந்தை பெரியாருக்கு பதிலாக நரேந்திர மோடியைத் தங்கள் தலைவராக, ஆசானாக, வழிகாட்டியாக ஈ.பி.எஸ்.-ஓ.பி.எஸ். கட்சி ஏற்றுக் கொண்டு விட்டதா? என்று கேட்டுள்ளார்.

## சரவணக்குமார்-திவ்யா இணையேற்பு விழா



‘தம்பிக்கு’, ‘கருஞ்சட்டை’ ஆகிய நூல்களை எழுதியுள்ள எழுத்தாளர் ம.சரவணக்குமார் நா.திவ்யா ஆகியோரின் இணையேற்பு 04.04.2021 அன்று காலை 9 மணியளவில் ICSA பரிபூரணா Training center, அம்பேத்கர் நகர், மணப்பாக்கத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்வை விளக்கி, வாழ்த்துரை கூறி இணையேற்பை நடத்தி வைத்தார். கழகத்தின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி வரவேற்பாற்றினார். நிகழ்வில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் மற்றும் சென்னை கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 08th April 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN